# tree talks

E.03
**Shaded Divinity**
Danister Perera

[00:05] லுணுகங்கை தோட்டத்தின் 75 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக, ட்ரீ டோக்ஸ் என்ற இந்த வலையொலி தோட்டங்களுக்குள் உள்ள தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் வாழ்க்கையை ஆராய்கிறது. 1948 இல் சுதந்திர நாளுக்கு முன்னைய நாளில் வாங்கப்பட்ட லுணுகங்கை ஜெஃப்ரி பாவாவின் முதலாவதும் நீண்ட காலமாக இயங்குவதுமான கட்டடக்கலை முயற்சியாகும், இந்த வாழும் காப்பகத்தின் சிக்கல்களை நாங்கள் அவிழ்க்கும் தருணத்தில் எங்களுடன் இணைந்திருங்கள்.

[00:31] ட்ரீ டோக்ஸ் வலையொலி அத்தியாயங்களுக்கான அனைத்து எழுத்துக் குறிப்புகள், மொழிபெயர்ப்புகள் மற்றும் துணை வழிகாட்டிகள் “லுணுகங்கையை நோக்கி“ மற்றும் “ஜெஃப்ரி பாவா“ வலைத்தளங்களில் கிடைக்கின்றன. நிகழ்ச்சிக் குறிப்புகளில் அவற்றுக்கான இணைப்புகள் கிடைக்கும்.

[00:46] கறுவா மலைப் புல்வெளியின் முகட்டில் மிகவும் உன்னிப்பாக வைக்கப்பட்டுள்ள மகிழ மரம் பிரதான வீட்டிலிருந்து தேத்துவ ஏரியை நோக்கி ஒருவரின் பார்வையை ஈர்க்கிறது. தேத்துவ ஏரி மறை ஆற்றலுடைய நாட்டுப்புறக் கதைகளுக்காக அறியப்படுகிறது. அவை ஏரியின் ஹெறாண்டுவ தீவில் ஒரு மரத்தில் வசிக்கும் ஒரு துறவியின் ஆவியின் மிகவும் சுவாரஸ்யமான கதைகள். தலைமுறைகளூடாக கடத்தப்படும் கதைகள் பெரும்பாலும் இயற்கையோடு ஒன்றோடொன்று இணைந்திருக்கும். இந்த அத்தியாயத்தில், ஆயுர்வேத நிபுணரும் கலாச்சார மானுடவியலாளருமான கலாநிதி டனிஸ்டர் பெரேரா மகிழம் போன்ற மரங்களின் கலாச்சார மற்றும் ஆன்மீக ஆர்வங்களை ஆராய்கிறார்.

[01:30] எனது பெயர் டனிஸ்டர் பெரேரா, நான் அருவமான கலாச்சார பாரம்பரியத்தின் நிபுணர். விசேடமாக, பாரம்பரிய அறிவு அதிகமாக நிலவியதும் தற்போது செயலற்று இருப்பதுமான மக்கள் மற்றும் பகுதிகளுடன் நான் பணியாற்றுகிறேன். குறிப்பாக கிராமப்புறங்களில். எனது ஆராய்ச்சிப் பரப்பு தாவரங்களின் கலாச்சார மற்றும் ஆன்மீக பயன்பாடுகள் மற்றும் பாரம்பரிய தாவர கதைகளில் அதிக கவனம் செலுத்துகிறது. நான் சில பழங்கால கையெழுத்துப் பிரதிகளுடன் பணிபுரிகிறேன், அவற்றில் மரங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் பற்றிய பல தகவல்களை நாம் காணலாம். அத்துடன் மக்களின் அறிவையும் நாங்கள் காணலாம். அதை இனம்சார் அறிவியல் என்று அழைக்கிறோம்.

[02:22] உறுதியானதாக அல்லது அருவமானதாக இருந்தாலும் மரங்கள் கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதி. மரம் தன்னை ஒரு பௌதிகப் பொருள் என்பதால், அது தொட்டுரணத்தக்கதாக கருதப்படலாம். ஆனால் மரங்கள் அருவமான பாரம்பரியத்தை தாமே உருவாக்குகின்றன. ஏனெனில் மரத்தை சுற்றி வாழும் மக்கள் அல்லது சுற்றியுள்ள வாழ்விடங்கள் சில நம்பிக்கை அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் கலாச்சார அருவமான கலாச்சார பாரம்பரியத்தை உருவாக்குகின்றன.

[03:00] இன்று நான் மரங்களின் கலாச்சார அம்சம் பற்றியும், மரங்களின் கலாச்சார, ஆன்மீக ஒப்புமைகள் பற்றியும் பேசப் போகிறேன். இப்போது, மரங்கள் பல நூற்றாண்டுகளாக சமூகத்தினதும் கலாச்சாரங்களினதும் நாகரிகத்தினதும் ஒரு ஒருங்கிணைந்த பகுதி என்பதை நாம் அனைவரும் அறிவோம். மர தெய்வங்கள் மீது மரங்களுக்கு ஒரு வகையான பூலோகத் தொடர்பு இருப்பதாகவும், அவை தெய்வங்களின் தங்குமிடங்கள் என்றும் பாரம்பரியமாக நாங்கள் நம்புகிறோம். எனவே நாம் அவர்களை ருக் தெவியோ என அழைக்கிறோம் இவை ஒரு வகையான மர தெய்வங்கள். எனவே மக்கள் மரங்களை பூலோக பரிசுகளாக மதிக்கிறார்கள். அவை இயற்கையின் ஒரு பகுதியாக இருப்பதோடு இயற்கையைப் பாதுகாக்கின்றன. சில நேரங்களில் மரங்கள் இயற்கையின் புனிதப் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை வணக்கத்திற்குரியவை, மேலும் மக்கள் மரங்களை புனிதமாக மதிக்க சில கலாச்சார மற்றும் ஆன்மீக காரணங்கள் உள்ளன. காவல் தெய்வங்கள் புனிதமான தோப்புகளில் வாழ்கின்றனர் என்று மக்கள் நம்புகிறார்கள். புனித தோப்புகள் இயற்கையாகவும் பாரம்பரியமாகவும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள். அவற்றுக்குள் நுழைவதற்கு முன்பு மக்களுக்கு சில கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் உள்ளன. மேலும் பாரம்பரிய தோப்புகள் அல்லது புனித தோப்புகளுடன் பணியாற்ற அவர்களுக்கு சில நெறிமுறைகள் உள்ளன. வனப்பகுதி தெய்வங்கள் அல்லது பூலோக சக்திகள், தெய்வீக சக்திகளால் பாதுகாக்கப்படுகிறது என்று மக்கள் நினைப்பதால், சில மரங்களை வெட்டவோ அல்லது சுரண்டவோ தடை செய்யப்பட்டுள்ளது. அந்த மரத்தின் ஒரு பகுதியை நீங்கள் எடுக்கவோ அல்லது அறுவடை செய்யவோ விரும்பினாலும், மரத்தில் தங்கியிருக்கும் தெய்வத்திடம் நீங்கள் அனுமதி பெற வேண்டும். எனவே, மரங்கள் வரலாற்று ரீதியாக மக்களால் புனிதமான உயிரினங்களாக மதிக்கப்படுகின்றன. மரங்கள் ஒரு வகையான உயிரினங்கள், அவர்கள் மரங்களை உயிரினங்களாக கருதுகின்றனர். எனவே, சில நேரங்களில் மக்கள் மரங்களுடன் பேசப் பழகினர். மரங்கள் உயிருடன் இருக்கின்றன, மரங்கள் சிந்திக்கலாம், மரங்கள் ஆசீர்வதிக்க முடியும் என்று அவர்கள் நினைத்தார்கள். மரங்கள் உயிருடன் உள்ளன, எனவே மரங்கள் அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும்.

[05:20] பாரம்பரியமாக, மக்கள் அன்றாட பயன்பாடுகளுக்காக மரங்களைத் தேர்ந்தெடுக்க தங்கள் சொந்த நெறிமுறைகளைக் கொண்டுள்ளனர். இப்போது, ஒரு உதாரணத்திற்கு, புனிதமான

விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட சில மரங்கள் உள்ளன. சோதிட ரீதியாக ஒன்பது கிரகங்கள் இருப்பதை நாம் அறிவோம். ஒன்பது கிரகங்களுக்கு ஒன்பது மரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ் சிங்கள புத்தாண்டுக்கான எண்ணெய் வைக்கும் விழாவைச் செய்யும்போது, சில மூலிகை இலைகள் உங்கள் தலையிலும் கால்களிலும் வைக்கப்படுவதை நாங்கள் கண்டிருக்கிறோம். அதாவது மரங்களுக்கான கிரக அடையாளங்களின்படி, ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மரம் உள்ளது. இருபத்தேழு நிலவு காலப் பிரிவுகள் உள்ளன, ஒவ்வொரு நிலவு காலப் பிரிவுகளுக்கும் மரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு சடங்கை வெற்றிகரமாக செய்ய மரங்கள் மற்றும் மரங்களின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும் சில சடங்குகள் உள்ளன என்பது எங்களுக்குத் தெரியும்.

[06:20] மீண்டும், மரங்களுடன் தொடர்புடைய சில புராணக்கதைகள் உள்ளன என்பதை நாங்கள் அறிவோம், குறிப்பாக ஒரு மரத்தின் தோற்றத்துடன் தொடர்புடைய புராணக்கதைகள் இருக்கின்றன. பொல் (தேங்காய்) உபத, புலத் (வெற்றிலை) உபத மீண்டும் தெஹி (எலுமிச்சை) உபத, தொலபோ (விச்சமூங்கில்) உபத, என நீங்கள் கேள்விப்பட்ட பாரம்பரிய சடங்குகள் எங்களிடம் உள்ளன. உபத என்றால் “தோற்றம்“ என்று பொருள் போல் உபத என்றால் அது தேங்காயின் தோற்றம். தேங்காய் இந்த உலகத்திற்கு எவ்வாறு தோன்றியது என்பதற்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது, இந்த தோற்றத்துடன் தொடர்புடைய ஒரு பூலோக அல்லது ஒரு வகையான மனித சம்பவம் எப்போதும் இருக்கும். இப்போது ஒரு உதாரணத்திற்கு, புலத் அல்லது வெற்றிலை இலைகள் நாக லோகத்தில் அல்லது நாகத்தின் உலகத்தில் தோன்றியதாக நம்பப்படுகிறது . எனவே இது அஹி லதா என அழைக்கப்படுகிறது, அஹி லதா என்பது பாம்புகளின் கொடி, “பாம்புக் கொடி“ என்று பொருள்படும். அவ்வாறான நிலையில், மரங்களின் பெயரிடலும் ஒரு வகையான கலாச்சார பரிமாணத்தைக் கொண்டுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். நீங்கள் ஒரு மரத்திற்கு பெயரிடும் போது, அதற்கு ஒரு அர்த்தம் இருக்கிறது, அதற்கு ஒரு கதை இருக்கிறது, அதன் பின்னால் ஒரு புராணக்கதை உள்ளது.

[07:34] மேலும், மத நம்பிக்கைகளுடன் தொடர்புடைய மரங்களும் உள்ளன. இப்போது அரச மரம் என்பதை நாம் அறிவோம், நாங்கள் அதை *Ficus religiosa* என அழைக்கிறோம். தாவரவியல் பெயரில் கூட, பெயரின் பகுதி கலாச்சார அம்சத்துடன் தொடர்புடையது. *Ficus religiosa*, “ரிலிஜியோசா“ என்றால் அது மதத்தில் பயன்படுத்தப்படுகிறது என்று பொருள்படும். ஒரு மதம் மட்டுமல்ல, இது பௌத்த மதம், இந்து மதம் மற்றும் சமண மதத்துடனும் தொடர்புடையது. அரச மரம் அல்லது பகவான் புத்தர் அறிவொளி பெற்ற புனித மரம் கடந்த நூற்றாண்டுகளாக வணங்கப்படுகிறது. அரச மரம் ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பின் அடையாளமாக மாறியுள்ளது. அந்த சூழமைவில், பல மரங்கள் இருப்பதை நாம் காணலாம். குறிப்பாக பெரிய மரங்கள், பெரிய மரங்கள் கலாச்சாரங்களால் பெரிய அளவில் மதிக்கப்படுகின்றன. அவற்றை முதன்மை வாய்ந்த இனங்கள் என்று அழைக்கிறோம். முதன்மை வாய்ந்த இனங்கள் என்றால் அவை கலாச்சார ரீதியாகவும் உயிர்ப் பல்வகைமையின் அடிப்படையிலும் மிகவும் முக்கியமானவை. இந்த மரங்கள் இயற்கையான வாழ்விடங்களில் பாதுகாப்பு செயன்முறையில் ஒரு வகையில் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளன. ஏனெனில் ஒரு பெரிய மரம் ஒரு நுண் சுற்றுச்சூழல் அமைப்பாகும். அது ஒரு வகையான பிற சிறிய தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு இடமளிக்கிறது. இது ஒரு வகையான சிறிய நுண்ணிய சுற்றுச்சூழல் அமைப்பு. நீங்கள் ஒரு மிகப் பெரிய மரத்தைக் கண்டால், அந்த மரத்தில் நீங்கள் பல வகையான மேலொட்டித் தாவரங்கள் மற்றும் பிற தாவரங்கள், கொடிகள் மற்றும் பல விலங்கு இனங்கள் இருப்பதைக் காணலாம். பறவைகள் மற்றும் பிற விலங்கு இனங்களும் இருக்கும். எனவே இந்த தாவரங்கள், இந்த மரங்கள், பெரிய மரங்கள், முதன்மை வாய்ந்த இனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை உயிர்ப் பல்வகைமையின் பாதுகாப்பில் ஒரு வகையில் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளன.

[07:34] ருத்ராக்ஷ போன்ற சில மரங்கள் உள்ளன, அது சிவ சிவ பிரிய அழைக்கப்படுவதை நாங்கள் காண்கிறோம். சிவப்பிரிய என்பதே பெயர், சிவப்பிரிய சிவபெருமானால் விரும்பப்படுவது என்று பொருள்படும். இந்த ருத்ராக்ஷ விதை மிகவும் மதிக்கப்பட்டு, அது ஒரு வகையான மிகவும் தெய்வீக சக்தியைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. எனவே, இந்த மரத்துடன், இந்த ஒரு மரத்துடன் மட்டுமே, தொடர்புடைய பல நம்பிக்கைகள் மற்றும் பல மதங்கள் உள்ளன. ஒவ்வொரு மரத்திற்கும் அதே வழியில் அந்த ஒரு மரத்துடன் தொடர்புடைய கலாச்சார கதைகள் மற்றும் மத மற்றும் கலாச்சார நடைமுறைகளை நாம் காணலாம். மேலும், சில மரங்கள் குழுக் கடவுள்களின் ஒரு வகையான சொத்தாக கருதப்படுகின்றன. இப்போது ஒரு உதாரணத்திற்கு, வில்வ மரம், நாம் வில்வ மரம் என்று அழைக்கிறோம். வில்வ மரம் சிவனுக்கு சொந்தமானது. ஒரு வில்வ இலைக்காம்பில் மூன்று இலைகள் உள்ளன. இந்த இலைகளின் வடிவம் சிவனின் திரிசூலத்தை குறிக்கிறது. அதே வழியில், எல்லா மரங்களுக்கும் ஒவ்வொரு மரத்துடன் தொடர்புடைய வகையில் மக்கள் தங்கள் சொந்த விளக்கம், அவர்களின் சொந்த வகையான கருத்து, கலாச்சார உணர்வு, ஆகியவற்றை கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் காணலாம். மரத்தின் வடிவம், சில சமயம் மரத்தின் பயன்கள், சில சமயங்களில் மரத்தின் வாசனை, மரத்தின் பூக்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும், மனிதர்கள் மரத்துடன் தொடர்புடைய பண்பாட்டு விவரணைகளைக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும், நான் உயிர்ப் பல்வகைமையை முன்னிலைப்படுத்த வேண்டும். மரங்கள் கலாச்சாரத்துடன் தொடர்புடையவை மட்டுமல்ல, அவை கலாச்சார பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமல்லாமல், அவை ஒரு உயிர்ப் பல்வகைமை சூழலைக் கொண்டுள்ளன, அது மிகவும் முக்கியமானது. எனவே கலாச்சார பல்வகைமை மட்டுமல்ல, உயிர்ப் பல்வகைமை மட்டுமல்ல, மரங்கள் உயிரியல் கலாச்சாரப் பல்வகைமையின் அடையாளம். இது உயிரியல் கலாச்சார பல்வகைமையின் நமது பாரம்பரியத்தின் அடையாளமாகும்.

[09:23] மற்றொரு சூழமைவில், கலாச்சாரப் பரிமாணத்தில் மரங்கள் சில தவறான அடையாளம் உள்ளதை பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிறந்த உதாரணம் குங்கிலிய மரம். நீங்கள் பெரும்பாலான பகுதிகளைப் பார்த்தால், நீங்கள் காணலாம் குங்கிலிய மரம் ஆனால் குங்கிலியமரத்திற்கு பதிலாக நாகலிங்க மரம் என்று அழைக்கப்படும் ஒரு மரம் எங்களிடம் உள்ளது. இது தாவரவியல் ரீதியாக *Couroupita* என அழைக்கப்படுகிறது. இது ஒரு தென் அமெரிக்க இனம். இது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பிரித்தானிய மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது.  இந்த தவறான அடையாளம் காரணமாக இப்போது அது ஒரு புனித மரமாக மாறியுள்ளது. நாங்கள் அதை குங்கிலிய மரம் என அழைக்கிறோம். ஆனால் உண்மையான குங்கிலிய மரம் என்பது *Shorea robusta*. மக்கள் இன்னும் இது தான் குங்கிலிய மரம் என்று நம்புகிறார்கள். நாகலிங்க மரம் தான் குங்கிலிய மரம் ஏனெனில், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இந்த மரம் குங்கிலிய மரம் என தவறாக அடையாளம் காணப்பட்டுள்ளது. . எனவே, சரியான கலாச்சார பாரம்பரியம் அல்லது கலாச்சார ஞானம் இருப்பது மரங்களின் சேர்க்கையில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இந்த அறிவு உண்மையான பரிமாற்றத்தால் பாதுகாக்கப்படும் அருவமான கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதற்காக தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு பரப்பப்படுகிறது.

[11:32] லுணுகங்கை பகுதியில் காணப்படும் மரங்களின் பட்டியலை நான் வாசித்தபோது, நான் *Couroupita* அல்லது நாகலிங்க மரத்தை கண்டேன். குங்கிலிய மரம் என தவறாக அடையாளம் காணப்படும் மரம் இதுதான். எனவே, நான் முன்மொழிவது என்னவென்றால் நீங்கள் உண்மையான குங்கிலியமரத்தை அதாவது *Shorea robusta* ஐ தோட்டத்திற்கு அறிமுகப்படுத்த முடிந்தால், குங்கிலிய மரம் பற்றி மக்களுக்கு ஒரு வகையான உண்மையான யோசனை இருப்பது மிகவும் முக்கியம்.

[12:50] மகிழும் லுணுகங்கை தோட்டத்தில் இருக்கும் சிறப்பு மரங்களில் மரம் ஒன்று என்று கேள்விப்பட்டேன். மகிழ மரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது, ஏனெனில் இது திரு. ஜெஃப்ரி பாவாவின் முக்கிய கவனத்தை கொண்டிருந்தது. அவர் மகிழ மரம் மீது மிகுந்த ஆர்வத்தோடு இருந்தார். மகிழ மரம் சமஸ்கிருதத்தில் பகுலா மரம் என அழைக்கப்படுகிறது. பகுலா அல்லது வகுலா மரம். இது தாவரவியல் ரீதியாக *Mimusops elengi* என அறியப்படுகிறது. கலாச்சார ரீதியாக மகிழ மரம் குறிப்பாக இந்துக்களிடையே ஒரு புனிதமான தாவரம். அது சமஸ்கிருத இலக்கியத்தில் அதன் மென்மையான மற்றும் மிகவும் மணம் கொண்ட பூக்களுக்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பௌத்த இலக்கியங்களையும், இந்து இலக்கியங்களையும் நீங்கள் வாசித்தால், கதைகளில் வனப்பகுதிகளை விவரிக்கும் போது, அவை பற்றி எப்போதும் குறிப்பிடுகின்றன. பகுலா மரம் அல்லது மகிழ மரம் பூக்கும் போது மிகவும் மாட்சி மிக்கதாகவும் மிகவும் அழகானதாகவும் இருக்கும். இது பழங்காலத்திலிருந்தே தோட்டத்தில் வைக்கக்கூடிய ஒரு வகையான நல்ல தாவரமாக இருந்து வந்திருக்கிறது. எனவே மகிழ மரம் அல்லது பகுலா மரம் இலக்கியத்துடனும் வரலாற்றுடனும் தொடர்புடைய ஒரு மிக முக்கியமான, கலாச்சார ரீதியாக மிக முக்கியமான தாவரமாகும்.

[13:24] இது கிருஷ்ணனுடன் தொடர்புடையது. கிருஷ்ணர் யமுனா நதிக் கரையின் பிருந்தாவனத்தின் பால் பணிப் பெண்களால் ஈர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவன் ஒரு பகுலா மரத்தின் கீழ் விளையாடிதாக கதையில் கூறப்பட்டுள்ளது. எனவே, இது கிருஷ்ணனுடன் தொடர்புடைய ஒரு வகையான புனித மரமாக மாறியுள்ளது. பெரும்பாலான சமஸ்கிருத இலக்கியங்களிலும், கவிதை இலக்கியங்களிலும், அதன் ஆசிரியர்கள் பகுலா மரம் அல்லது மகிழ மர பூக்கள், அழகான பூக்கள் காரணமாக அதை காதல் மற்றும் அழகின் அடையாளமாக விவரித்துள்ளனர். நீங்கள் பகுலா மரத்தை இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் காணலாம். ஜாதகக் கதைகள் போன்ற பிற பௌத்த இலக்கியங்களிலும் காணலாம். ஒரு சூழமைவில், பகுலா அல்லது மகிழம் என்பது மும்மூர்த்திகளுக்காக புனிதமானதாக கருதப்படுகிறது. மும்மூர்த்தி என்பது பிரம்மா, விஷ்ணு, மற்றும் சிவன், இந்த மும்மூர்த்தி ஒரு சின்னம். பகுலாவின் பூக்கள் ஒரு வகையான மிகவும் இனிமையான புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்தைக் கொண்டுள்ளன. இதுவேதான் அது கதைகளின் காதல் சூழமைவுகளில் அடிக்கடி குறிப்பிடப்படுவதற்கு காரணம். பண்டைய கதைகளில், குறிப்பாக பண்டைய இந்திய முனிவர்கள் இந்த மரங்களை கடவுளின் பரிசாகக் கருதினர். பகுலா காட்டுக்கு ஒரு வகையான பூலோக பரிசு. பகுலா மரங்கள் கோயில் தோட்டங்களில் வளர்வதை நீங்கள் அடிக்கடி காணலாம். பழங்கால புத்தகங்களை நீங்கள் வாசித்தால் கோவில் தோட்டங்களை விவரிக்கும் இடங்களில் பெரும்பாலான நேரங்களில், பகுலா மரம் அதன் ஒரு பகுதியாக இருந்தது.

[14:46] பகுலா ஒரு மங்கல மரமாக வீட்டின் வலது பக்கத்தில் நடப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. சோதிட ரீதியாக, வீட்டின் ஒவ்வொரு திசையிலும் மங்கல மரங்கள் நடப்பட உள்ளன என்பதை இப்போது நாம் அறிவோம். மேலும் அவமங்கலமான மரங்களும் உள்ளன. எனவே வகுலா மங்கல மரங்களில் ஒன்று என்பதோடு அது வீட்டின் நுழைவாயிலில் வலது பக்கத்தில் நடப்பட வேண்டும். வலது பக்கம் என்றால் ஆண் பகுதி. எனவே பகுலா ஒரு ஆண் தாவரம், ஒரு ஆண்மை இயல்பைக் கொண்ட தாவரம். எனவே வலது பக்கம் மங்கல நோக்கங்களுக்காக அந்த தாவரத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

[16:24] பின்னர் இந்திய இலக்கியங்களில் பெரும்பாலான முனிவர்கள், அவர்கள் தோட்டங்களில் பகுலா மரங்களின் கீழ் அமர்ந்திருந்ததாக விவரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்களின் பக்தர்கள் வந்து பகுலா மரங்களின் நிழலின் கீழ் அவர்களின் போதனைகளைக் கேட்கிறார்கள். பகுலா

மரம் ஒரு வகையான ஆன்மீக சக்தியை அதன் நிழலால், அதன் தங்குமிடத்தால் தருகிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இயற்கையாகவே இது தங்குமிடம் மூலம் ஒரு வகையான ஆன்மீக ஒத்திசைவை அளிக்கிறது. அதனால்தான் முனிவர்கள் பகுலா மரங்களின் கீழ் பிரசங்கம் செய்தனர். பகுலா மரத்தின் அதிகளவில் நறுமணமுள்ள பூக்கள் பண்டைய கலாச்சாரத்தில் சவர்க்காரங்கள் மற்றும் நறுமணம் கொண்ட பொருட்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டன. ராணிகள் இந்த நறுமணத்தால் அதிகளவில் ஈர்க்கப்பட்டனர். மேலும் அவர்கள் தங்கள் படுக்கையறைகள் மற்றும் பிற பகுதிகளில் இந்த வகையான பூக்களை வைத்திருந்தார்கள். அதனால் அந்த பகுதியை மேலும் புதியதாகவும், புதுப்பித்ததாகவும் மாற்றினர்.

[17:04] சோதிட ரீதியாக, இருபத்தி ஏழு சந்திர காலப் பகுதிகள் அல்லது நட்சத்திரங்கள் உள்ளன என்பதை நாங்கள் அறிவோம். சோதிட ரீதியாக பகுலா மரம் அனுர நட்சத்திரத்திற்கு சொந்தமானது. இலங்கையில் பாரம்பரிய சாந்திகர்மா குணப்படுத்துதல் சடங்குகளில் எங்களிடம் அசுவேக்பமல் பலிய, அசு-எக் என்ற ஒரு சடங்கு உள்ளது அது "எண்பத்தொன்று" என்று பொருள்படும். அந்த சடங்கில் நீங்கள் எண்பத்தொரு அறைகளைக் காண்பீர்கள். வகுலா அந்த குணப்படுத்தும் சடங்கிற்கு பயன்படுத்தப்படுகிறது. மகிழம் பூக்கள் சாந்திபஸ்திக யந்திரம் ஓதும்போது பயன்படுவதோடு இது பாரம்பரிய மருத்துவத்தில் பல்வேறு மருத்துவ எண்ணெய்களில் பரிந்துரைக்கப்படுகிறது.

[18:07] பகுலா அல்லது.. மன்னிக்கவும், நான் எப்போதும் பகுலா என்று சொல்கிறேன். பகுலா அல்லது வகுலா என்பது மகிழம் என்பதற்கான சமஸ்கிருதச் சொல், சில நேரங்களில் அது வகுலா என குறிப்பிடப்பட்டுள்ளது. பகுலா மற்றும் வகுலா ஒத்த சொற்கள். மகிழம் ஒரு மருத்துவ விளைவையும் கொண்டிருக்கிறது. இது பல்வேறு மருத்துவ தயாரிப்புகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இந்து இலக்கியங்களில், இது முப்பத்தாறு புனித மரங்களில் ஒன்றாகும். இந்து மதத்தில் முப்பத்தாறு புனித மரங்கள் உள்ளன, பகுலா அவற்றில் ஒன்று. குப்ஜிகா தாந்திரீகம் என்று ஒரு தாந்திரீகம் உள்ளது அது பகுலாவை ஒருவித ஆன்மீக சக்தியைப் பெறுவதற்கான மருந்தாக பரிந்துரைக்கிறது. குப்ஜிகா தாந்திரீகம் மக்கள் தங்கள் ஆன்மீக வளர்ச்சியை சில தாந்திரீக நடைமுறைகளுடன் கடைப்பிடிப்பதற்கான வழிகாட்டுதல்களை கொண்ட ஒரு இந்திய புத்தகம். அதன் மூலம் அவர்கள் சில பூக்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் சில வகையான பௌதிக பொருட்களைப் பயன்படுத்தி ஆன்மீக ஒத்திசைவை அடைகிறார்கள். இந்த பகுலா அவ்வாறான பௌதிக பொருட்களில் ஒன்று.

[18:57] மகிழம் மரத்தின் மரம் புனிதமான செதுக்கல்களுக்கும் கடவுள்களின் உருவங்களை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. நாங்கள் அதை பிரதிமா என அழைக்கிறோம். இந்த வகையான உருவங்களை உருவாக்க பயன்படும் புனித மரங்களில் பகுலாவும் ஒன்று. பகுலா அல்லது மகிழம் என்பது ஒரு வகையான சேதிய மரம், சேதிய மரம் என்றால், வணங்கப்படும் மரங்கள். முன்பு நான் இந்து மதத்தில் சுமார் முப்பத்தாறு புனித மரங்கள் உள்ளன என்று சொன்னேன். இப்போது இவை சேதிய மரங்கள் என அழைக்கப்படுகின்றன. சேதிய என்பதன் பொருள் "சைத்ய" இவை எந்த வகையான மரங்கள் என்றால்.. அவற்றிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக நீங்கள் சில பூசைகள் செய்யும் பெரிய மரங்களே இவை. அரச மரத்தைப் போலவே, நாங்கள் ஆல மரம், நாக மரம் ஆகிய மரங்களை நாங்கள் பயன்படுத்துகிறோம். இந்த வகையான பெரிய மரங்கள் சேதிய மரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பகுலா அல்லது மகிழம் அவற்றில் ஒன்றாகவும் உள்ளது. எமது இலங்கை மரபில், பகுலா அல்லது மகிழம் யம தேவராஜ தைலத்தில் பயன்படுத்தப்படுகிறது. யம தேவராஜ

தைலம் ஒரு மருத்துவ எண்ணெய். மகா தீயோரு தைலம் மற்றும் மகா சரஸ்வதி தைலம், ராஜா சரஸ்வதி தைலம் போன்ற மருத்துவ எண்ணெய்களிலும் மகிழம் மூலப்பொருட்களில் ஒன்றாக இருக்கிறது. ஹெனராஜ குலிய என்பது நாம் பயன்படுத்தும் மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும் மகிழம் அந்த மருத்துவ மாத்திரையிலும் மூலப்பொருளாக உள்ளது.

[20:06] நீங்கள் இலக்கியத்திற்குச் சென்றால், நீங்கள் மகிழத்தை காணலாம். மகிழம் என்ற பெயர் ருவன்மாளிகந்துவ, அசத்ருஷ்ய ஜாதக காவ்ய, சிங்கள போதி வன்ஷய, சிகா வலந்த வினிசா போதிவன்ச கெடபாதயா, விசித்துர தசன்னாய, ஜாதக அதுவ கெடபாதய, பூஜ குணிய, தர்மப்தீபிகாவ, ஸதர்மரத்னவாலிய, தலதா சிறிதா, கௌசிலுமின, சிங்கள ஜாதக போத்த, ஸ தர்ம அலங்காராய, ஸதர்ம அலங்காராய, ரத்னகராய, பரேவி சந்தேஷாய, கவுல் சந்தேஷ ாய, கஹகுருலு சந்தேஷாய, மஹரூப சித்திசன்னாய, ரோஹோத்சம்ஹிந்த, நாரத சன்ஹித, வாஸ்து ரத்னவலிய போன்ற பல இலக்கிய ஆதாரங்களில் காணக் கிடைக்கிறது. இது மகிழத்தை இலக்கியத்தில் ஒரு பெயராகவும் அதன் பயன்பாடுகளாகவும் நாம் காணக்கூடிய புத்தகங்களின் ஒரு வகையான பட்டியல். எனவே இது நமது கலாச்சாரத்திலும், கிராமங்களில் உள்ள நமது பாரம்பரிய சமுதாயத்திலும் மிகவும் சுவாரஸ்யமானதும் பயனுள்ளதுமான மரம். மேலும் இது ஒரு பல்நோக்கு, பல பயன்பாட்டு மரமாக கருதப்படுகிறது. ஏனென்றால் மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு இயற்கை தாவரங்களைப் பயன்படுத்துவதில் தங்கள் சொந்த ஞானத்தைக் கொண்டுள்ளனர்.

[21:36] எனவே, இந்த இரண்டிற்கும் இடையிலான உறவு, இந்த இரண்டிற்கும் இடையிலான தொடர்பு, என அவற்றின் உருவமானவற்றையும் அருவமானவற்றையும் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். ஏனென்றால் நாம் அவற்றைப் பிரிக்க முடியாது, அவற்றைப் பிரித்து தனித்தனியாக எடுக்க முடியாது, ஏனெனில் அவை ஒன்றுக்கொன்று சார்ந்து வாழ்கின்றன.

[22:57] நீங்கள் அப் பொருளை அகற்றினால், முழுக் கலாச்சாரமும் மறைந்துவிடும். அபிவிருத்தி தலையீடுகள் காரணமாக நாம் மிகவும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும் தற்போதைய சமூகத்தில் இது மிகவும் முக்கியமான சவால்களில் ஒன்றாகும். இப்போது கலாச்சார உணர்வு இல்லாத அபிவிருத்தி தலையீடுகளால், சில நேரங்களில் கலாச்சாரம் அபிவிருத்தியால் அரிக்கப்படும். அபிவிருத்தி கலாசாரம் தொடர்பான எந்தவித உணர்வும் அற்றது. அது கலாச்சாரம் மீதான தாக்கத்தை அளவிடாது. இப்போது பொதுவாக எங்களுக்குத் தெரியும். அபிவிருத்தித் திட்டங்களில் அவர்கள் “சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு“ செய்வார்கள். ஆனால் அவர்கள் “கலாச்சார தாக்க மதிப்பீடு“ செய்வதில்லை என்று எங்களுக்குத் தெரியும், அவர்களுக்கு உண்மையில் கலாச்சாரம் பற்றி கவலை இல்லை. அதுதான் காரணம்.

[23:17] ஏனென்றால் பொதுவாக கிராமப்புறங்களில் விசேடமாக எல்லா கிராமங்களிலும், கிட்டத்தட்ட எல்லா கிராமங்களிலும், தீவு முழுவதும், அவர்கள் குறைந்தது 10-15 பெரிய மரங்களைக் கொண்டுள்ளனர், அங்கு அவர்கள் மரத்திற்கு சில சடங்குகளையும் கிரியைகளையும் செய்கிறார்கள். பின்னர் அந்த வகையான கலாச்சாரப் பொருளை அகற்றுவது பாரம்பரியத்தில் மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தக்கூடும். அதனால்தான் உருவமான மற்றும் அருவமான கலாசார பாரம்பரியங்களுக்கு இடையில் எந்தப் பிரிவும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, உறுதியான கலாச்சாரப் பாரம்பரியத்தை நாம் பாதுகாக்க விரும்பினால், அதனுடன் தொடர்புடைய அருவமான கலாச்சாரப் பாரம்பரியத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.

[24:05] இயற்கையானது ஒரு வகையான வடிவமைப்பில் சுற்றுச்சூழல் அமைப்புகளை

உருவாக்கியுள்ளது, அது இயற்கையால் உருவாக்கப்பட்டது. அதனால்தான் சூழல், இயற்கை சூழல் பற்றிய அறிவோ சரியான புரிதலோ இல்லாமல் இயற்கையை எந்த விதமான கையாளுதலும் செய்யும்போது மனிதர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

[24:49] எனவே நாங்கள் மரங்கள் மீது ஒரு உணர்வுசார் அல்லது கலாச்சார மரியாதையை கொண்டிருக்க வேண்டும். நாம் மரங்கள் மீதான அந்த வகையான மரியாதையை ஊக்குவிக்க வேண்டும். எனவே, அதனால்தான் பண்டைய சமூகங்களில் பசுமை மதங்கள் காட்டுடன் வாழ்ந்து வந்த மக்களால் அதிகளவில் கடைப்பிடிக்கப்பட்டன. பசுமை மதங்களை சேர்ந்த அவர்கள் எப்போதும் மரங்களை உயிரினங்களாக மதித்தனர். மரங்களாலும் சிந்திக்க முடியும் என்றும் மரங்களால் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். எனவே சில நேரங்களில் மக்கள் இது ஒரு வகையான வழக்கற்றுப் போன யோசனை என்றும் மக்கள் மரங்களையும் கற்களையும் வணங்கக்கூடாது என்றும் நினைக்கலாம். இது ஒரு வகையான மிகவும் பழமையான நடைமுறை. ஆனால் என்னைப் பொறுத்தவரை இது ஒரு பழமையான நடைமுறை அல்ல.

[25:11] இப்போது நீங்கள் மரங்களை நடவு செய்வதற்கான நவீன அல்லது தற்போதைய நடைமுறையைப் பார்த்தால், அது ஒரு வகையான மிகவும் செயற்கையான விடயம். சில நேரங்களில் சில கவர்ச்சியான உயிரினங்களை இயற்கைக்கு நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். எனவே, நாங்கள் முதலில் எங்களுடைய சொந்த இயல்பைப் புரிந்துகொண்டு, அந்த சூழலுக்கு ஏற்ற உயிரினங்களை மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.  நாங்கள், விசித்திரமான உயிரினங்களை அறிமுகப்படுத்தக் கூடாது. மற்ற உயிரினங்களுடன் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளக்கூடிய உயிரினங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

[26:04] ஜெஃப்ரி பாவா தனது தோட்டத்தில் கடைப்பிடித்த எண்ணக்கரு அதிகளவில் இயற்கைக்கு நட்பானதாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் அவரது நோக்கம் ஒரு வகையான காடுசார் சூழலை உருவாக்குவதாக இருந்தது. காட்டுச் சூழல் என்றால், உயிரினங்களுக்கிடையேயான இடைத்தொடர்பை நீங்கள் பராமரிக்கும் இயற்கைச் சூழலே. மரங்கள் உயிரினங்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

[26:38] எனவே, ஒரு தோட்டத்தில் மரங்களின் ஒரு வகையான சமுதாயத்தை வைத்திருப்பது மிகவும் முக்கியமானது. இங்கேயும் அங்கேயும் தனிமைப்படுத்தப்பட்ட மரங்கள் மட்டுமல்லாது, அவற்றை ஒன்றிணைக்க, மரங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் ஒரு வகையான ஆசீர்வாதமளிக்கும் சூழலை உருவாக்குவது மிக மிக முக்கியம். அவைகளுக்கும் உணர்வுகள் உள்ளன என்பதை மறந்துவிடாதீர்கள். எனவே, அவற்றினிடையே அவற்றின் சொந்த தொடர்புகளை நீங்கள் அனுமதித்தால், அவை மகிழ்ச்சியாக இருக்கும். அப்போது அவை மகிழ்ச்சியாக இருக்கும். நீங்கள் சுற்றுச்சூழலை மகிழ்ச்சியடையச் செய்தால், சூழல் உங்களை ஆசீர்வதிக்கும். எனவே, இயற்கையோடு வாழ்வது, மரங்களுடன் வாழ்வது, சுற்றுச்சூழலுடன் வாழ்வது ஒரு கலை. நீங்கள் அந்தக் கலையை அறிந்து கொள்ள வேண்டும். அங்கு முதலில் நீங்கள் மரங்களை உயிரினங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் நீங்கள் அவற்றின் வாழ்க்கைத் தரத்தை மதிக்க வேண்டும்.

[27:06] ட்ரீ டோக்ஸை கேட்டதற்கு நன்றி, இந்த வலையொலி ஜெஃப்ரி பாவா அறக்கட்டளையின் பதிப்புரிமை பெற்றது, அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. அனைத்து ஒலி மற்றும் காணொளி பதிவுகளும் ஜெஃப்ரி பாவா கியூரேட்டோரியல் குழுவால் தளத்தில் எடுக்கப்பட்டன.

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் அல்லது கருத்துகள் இருந்தால் தயவுசெய்து எங்களை assistant.curator@gbtrust.net மூலம் அணுகுங்கள். உங்களிடமிருந்து கருத்துக்களை கேட்க நாங்கள் ஆவலாக உள்ளோம்.

GEOFFREY BAWA TRUST